# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 99 | 4 Pages | 11.11.2023 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 99 | 4 பக்கங்கள் | 11.11.2023 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## மகளிர் உரிமைத் திட்டம் இந்தியாவுக்கே முன்மாதிரியாக உள்ளது: முதலமைச்சர் பெருமிதம்

சென்னை, நவ.11

மகளிர் உரிமைத்தொகையினை இரண்டாவது கட்டமாக வழங்கும் திட்டத்தை கலைவாணர் அரங்கில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது:

என் குரலை கேட்கிற போதே உங்களுக்கு நன்றாக தெரியும். அதனால்தான் சில நாட்கள் வீட்டிலேயே முழு ஓய்வு எடுத்துக் கொண்டேன்.




இந்த வாரம் முழுவதும் ஓய்வெடுக்க வேண்டும் என்று என்னுடைய மருத்துவர்கள் சொன்னாலும், என்னால் மக்களைச் சந்திக்காமல் இருக்க முடியாது.

அதனால்தான் தமிழ்நாடு முழுவதும் எல்லாமாவட்டத்தில் இருந்தும், காணொலி காட்சி மூலமாக இணைந்திருக்கிற உங்களைப் பார்க்க வந்துவிட்டேன்.

தொண்டை வலி இருந்தாலும் தொண்டு செய்வதில் தொய்விருக்கக் கூடாது என்பதால் வந்துள்ளேன்.

உங்களைப் பார்க்கும்போது என்னுடைய உடல்வலி குறைந்து மனது மகிழ்ச்சியில் நிறைந்துள்ளது. இந்த 1000 ரூபாய் நீங்கள் வாங்கும் போது உங்களுக்கு ஏற்படுகிற மகிழ்ச்சியை விட கொடுக்கும்போது எனக்குத்தான் அதிக மகிழ்ச்சி ஏற்படுகிறது. அந்த மகிழ்ச்சியை விட சிறந்த மருந்து எதுவாக இருக்கமுடியும். அதனால்தான் மருத்துவர்கள் அறிவுரையை மீறி இந்த விழாவுக்கு வந்துள்ளேன்

மகளிர் உரிமைத்தொகை நிறைவேற்ற முடியாத வாக்குறுதி என சிலர் விமர்சித்தனர். சொன்னதைச் செய்வோம் அதன் அடையாளமே மகளிர் உரிமைத்திட்டம்.

சொன்னதைச் செய்ததால் உங்கள் முன் தைரியமாக நிற்கிறேன். மகளிர் உரிமைத் திட்டம் இந்தியாவுக்கே முன்மாதிரியாக உள்ளது என தெரிவித்தார்.

## இந்துத்துவா தொடர்பான மனு சுப்ரீம் கோர்ட்டில் தள்ளுபடி



புதுடெல்லி, நவ.11

இந்துத்துவா தொடர்பான விவகாரங்களை பள்ளி பாடத்திட்டங்களில் சேர்ப்பது போன்ற நடவடிக்கைகள் மூலம் பாதுகாக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டு இருந்தது.

இந்தமனுசுப்ரீம்கோர்ட்டில்நீதிபதிசஞ்சய்கிஷன்கவுல்தலைமையிலான அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள், இந்த விவகாரம் தொடர்பாக நீங்கள் கேட்க வேண்டியது அரசாங்கத்திடம்தான் நீதிமன்றத்திடம் அல்ல எனக்கூறி இந்த மனுவை ஏற்க முடியாது என தெரிவித்து தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

மேலும் உங்களின் பிரசாரத்தை மற்றவர்கள் பின்பற்ற வேண்டும் என்று எப்படி நீங்கள் முடிவு செய்யலாம்? என்று கேள்வி எழுப்பினர்.

## கவர்னருக்கு எதிராக தமிழக அரசு ரிட் மனு: மத்திய அரசு பதிலளிக்க சுப்ரீம் கோர்ட் உத்தரவு

புதுடெல்லி, நவ.11

தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி, அரசு உத்தரவுகளை நிறைவேற்றுவதில் தாமதம் செய்வதாகவும், மசோதாக்களுக்கு ஒப்புதல் தராமல் கிடப்பில் போடுவதால் அரசு பணிகள் முடங்கி உள்ளதாகவும் தமிழக அரசு குற்றம் சாட்டி வந்தது.

கவர்னர் ஆர்.என்.ரவிக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் கடந்த 30ம் தேதி தமிழக அரசு சார்பில் வழக்கு தொடரப்பட்டது. தமிழக அரசு தாக்கல் செய்தவழக்குமனுவில், 'தமிழககவர்னர்ஆர்.என்.ரவி, அரசுஉத்தரவுகளை நிறைவேற்றுவதில் தாமதம் செய்கிறார், மசோதாக்களுக்கு ஒப்புதல் தராமல்கிடப்பில்போடுகிறார். இதனால்அரசுபணிகள்முடங்கி உள்ளன. மேலும் அரசியல் சாசனம் வழங்கி உள்ள அதிகாரத்தை தவறாக பயன்படுத்துகிறார்.

எனவே மசோதாக்களுக்கு கவர்னர் ஒப்புதல் அளிக்க கால வரம்பு நிர்ணயம் செய்ய உத்தரவிட வேண்டும்' என்று கூறப்பட்டு இருந்தது.

இந்நிலையில், இந்த வழக்கு இன்று சுப்ரீம் கோர்ட்டில் தலைமை நீதிபதி சந்திரசூட் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. தமிழக அரசு சார்பில் மூத்த வக்கீல் அபிஷேக் சிங்வி உள்ளிட்டோர் ஆஜராகி வாதாடினார்கள். அவர்கள் தங்கள் வாதத்தின் போது கூறியதாவது:

தமிழக அரசின் செயல்பாடுகளை கவர்னர் ஆர்.என்.ரவி முடக்குகிறார். தமிழக சட்டசபையில் நிறைவேற்றிய மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் காலதாமதம் செய்கிறார். கைதிகளை முன்கூட்டியே விடுதலை செய்யும் கோப்பில் கூட அவர் கையெழுத்திடவில்லை. பணி நியமனம் தொடங்கி எந்த ஒரு கோப்புகளுக்கும் அனுமதி கொடுக்க கவர்னர் மறுப்பு தெரிவிக்கிறார். 2020ம் ஆண்டு முதல் பல மசோதாக்கள் கிடப்பில் போடப்பட்டு உள்ளன. இதனால் தமிழக அரசின் உரிமை மட்டுமல்ல, தனி நபரின் உரிமையும் பறிக்கப்படுகிறது. அரசின் முக்கிய பணியிடங்களை முடக்குவதற்கான மசோதாக்களை கூட கவர்னர் கண்டு கொள்ளவில்லை.

தமிழ்நாடு முதல் காஷ்மீர் வரை கவர்னர்களால் ஏற்படும் பிரச்சினையை சொல்லும் வகையில் வழக்கை தொடர்ந்து உள்ளோம்.

இவ்வாறு அவர்கள் வாதாடினார்கள்.

அவர்களிடம் நீதிபதி, 'தமிழக கவர்னருக்கு எதிரான வழக்கை மிகவும் முக்கியமானதாக பார்க்கிறோம். கவர்னருக்கு எதிரான தமிழக அரசின் வழக்கைதீபாவளிவிடுமுறைக்குபிறகுவிசாரிக்கலாமா' என்றுகேட்டனர்.

பின்னர் இந்த வழக்கில் எதிர் மனுதாரருக்கு நோட்டீஸ் அனுப்ப நீதிபதிகள் உத்தரவிட்டனர். கவர்னரின் செயலாளர் மற்றும் மத்திய உள்துறை அமைச்சகத்துக்கும் நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டனர். அதன்பின் இந்த வழக்கு விசாரணையை வரும் 24ம் தேதிக்கு ஒத்திவைத்தனர். மேலும் அன்று மத்திய அரசு வக்கீல்கள் ஆஜராக உத்தரவிட்டனர்.

## பிரதமர் மோடி இப்படி பேசுவது ஆட்சேபணைக்கு உரியது: ராஜஸ்தான் முதல் மந்திரி




ஜெய்ப்பூர், நவ.11

ராஜஸ்தான் மாநிலத்தின் உதய்பூரில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் பிரதமர் மோடி கலந்து கொண்டார். அப்போது அவர் பேசுகையில், ராஜஸ்தானில் ஆட்சி செய்து வரும் காங்கிரஸ் அரசு பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக செயல்பட்டு வருகிறது. பா.ஜ.க. வெற்றி பெற்றால் ராஜஸ்தானில் உள்ள குண்டர்கள் ராஜ்ஜியத்தை அடியோடு ஒழிப்போம் என தெரிவித்தார்.

இந்நிலையில், ஜெய்ப்பூரில் முதல் மந்திரி அசோக் கெலாட் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

பிரதமரை யாரோ தவறாக வழிநடத்தி விட்டனர் அல்லது அவருக்கு சரியாக விளக்கமளிக்கவில்லை.

ஜனநாயகத்தில் நேற்று அவர் பயன்படுத்திய மொழி ஆட்சேபணைக்குரியது. ராஜஸ்தானில் நிலவும் சூழல் காரணமாக அவர் பதற்றமடைந்து இதுபோன்ற அறிக்கைகளை வெளியிட்டு இருக்கலாம்.

இதுபோன்ற மொழியைப் பயன்படுத்த வேண்டாம் என்று பிரதமரிடம் கேட்டுக்கொள்கிறேன். நாங்கள்சித்தாந்தத்தின்அடிப்படையில்தேர்தலை எதிர்கொள்கிறோம் என தெரிவித்தார்.

## திருப்பூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பட்டதாரி ஆசிரியர் (TRB) தேர்வுக்கான இலவச இணைய வழி பயிற்சி வகுப்புகள்: கலெக்டர் தகவல்

திருப்பூர், நவ.11

திருப்பூர், மாவட்ட ஆட்சியர்அலுவலகத்தில் அமைந்துள்ள மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையத்தில் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான இலவசபயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகிறது. தற்போது ஆசிரியர் தேர்வு வாரிய 2023 ஆம் ஆண்டுத் திட்ட நிரலின் படி, பட்டதாரி ஆசிரியர் 2222 காலிப்பணியிடங்களுக்கான தேர்வு அறிவிப்பு 25.10.2023 அன்று வெளியிடப்பட்டுள்ளது. இத்தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள். 30.11.2023. மேற்படி தேர்வுக்கான இலவச இணையவழி (ONLINE) பயிற்சி வகுப்பு திருப்பூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம் மூலமாக 27.11.2023 அன்று தொடங்கப்படவுள்ளது.

இப்போட்டி தேர்வுக்கு தயாராகும் இளைஞர்கள் இந்த இலவசப் பயிற்சியில் கலந்து கொண்டு பயில்வதற்கு தங்களது சுய விவரத்தினை https://forms.gle/gsZtU6Quse6iG71XA என்றLinkஅல்லதுகீழேகொடுக்கப்பட்டுள்ள QR Code மூலமாக முன்பதிவு செய்யலாம். மேலும் கூடுதல் தகவல்களுக்குமாவட்டவேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நேரிலோஅல்லது 04212999152, 9499055944 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம். போட்டித் தேர்விற்கு தயாராகும் இளைஞர்கள் அனைவரும் இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தா. கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்கள்.

## தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM) தற்காலிக முறையில் வெளிமுகமை மூலம் MIS Analyst பணியிடம் கீழ்க்காணும் தகுதிகளின் அடிப்படையில் தேர்வு: கலெக்டர் தகவல்

திருப்பூர், நவ.11

திருப்பூர்; மாவட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM) தற்காலிக முறையில் வெளிமுகமை மூலம் ரூ.25000 மாத சம்பளத்திற்கு MIS Analyst பணியிடம் கீழ்க்காணும் தகுதிகளின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட உள்ளது.

I.MIS Analyst பணிக்கு விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்:

தகுதிகள்:

BE or B.Tech in Computer Science / IT / Computer Application / Master of Computer Application / Master in Science (M.Sc.) in IT / Computer Application, Master Degree in Computer / IT Specialization.

வயது: 30 வயதிற்குள்

முன்அனுபவம் :

Minimum three years relevant working experience in MIS/MIS Tools / Data Analysis / Web Applications / Mobile App.

Experience in programming in open source software, tools and application.

Experience in Database development and maintenance.

Experience in Data Analytical tool.Excellent in Excel and Presentations skills.

ஐஐ. ஊதியம்

1. MIS Analyst:ரூ.25,000

ஐஐஐ. தேர்வு முறை : தேர்வு நிலை தேர்வு நடைபெறும் நாள்

1. எழுத்துத் தேர்வு 20.11.2023

2. நேர்முகத் தேர்வு 21.11.2023

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை கீழ்கண்ட முகவரிக்கு,

இணை இயக்குநர் ஃ திட்ட இயக்குநர்,

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் / மகளிர் திட்டம்,

நெ.305, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திருப்பூர்; 641 604.

தொலைபேசி எண். 0421 2971149

நேரிலோ / தபால் மூலமாகவோ 17.11.2023க்குள் அனுப்பி வைக்க மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்கள்.

## குடிமங்கலம் அரசு பள்ளியில் ஓவிய கண்காட்சி

உடுமலை, நவ.11

திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே உள்ள குடிமங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளியில் உள்ள சித்திர கூடத்தில் ஓவிய கண்காட்சி நடந்தது. இதில் மாணவ மாணவிகளின் விதவிதமான ஓவிய படைப்புகள் காட்சிப்படுத்த ப்பட்டது.

நிகழ்ச்சிக்கு பள்ளி தலைமை ஆசிரியர் பழனிச்சாமி தலைமை தாங்கினார். உதவி தலைமை ஆசிரியர் ஜோதிமணி வரவேற்று பேசினார்.

இதில் சிறப்பு விருந்தினராக திருப்பூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கீதா கலந்து கொண்டு மாணவ மாணவிகளின் ஓவிய படைப்புகளை பார்வையிட்டு வாழ்த்துக்கள் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் பள்ளியின் அனைத்து ஆசிரியர்களும்கலந்துகொண்டனர். முடிவில்உயர்நிலைஉதவிதலைமை ஆசிரியர் சக்திவேல் ராஜா நன்றி கூறினார். இதற்கான ஏற்பாடுகளை ஓவிய ஆசிரியர் தியாகராஜன் செய்து இருந்தார்.




## மாதப்பூர் முத்துக்குமாரசாமி கோவிலில் கந்த சஷ்டி விழா: 13ந்தேதி தொடங்குகிறது

பல்லடம், நவ.11

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே உள்ள மாதப்பூரில் புகழ் பெற்ற முத்துக்குமாரசாமி மலை கோவில் அமைந்துள்ளது. இந்த கோவிலில் ஆண்டுதோறும் கந்த சஷ்டி விழா மிக சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. இங்கு பக்தர்கள், விழாவின் தொடக்க நாள் அன்று காப்பு கட்டி விரதத்தை தொடங்குவார்கள்.



அந்த வகையில் இந்த ஆண்டுக்கான கந்த சஷ்டி விழா வருகிற 13ந்தேதி (திங்கட்கிழமை) மகா கணபதி ஹோமத்துடன் நிகழ்ச்சிதொடங்குகிறது. தொடர்ந்து தினசரி காலை 8.30 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 5.30 மணி முதல் 7.30 மணி வரையிலும் யாகசாலை பூஜைகள், சுவாமிக்கு அபிஷேகம், தீபாராதனையும், தினசரி ஆன்மீக சொற்பொழிவுகளும் நடைபெற உள்ளது.

அதனை தொடர்ந்து 18 ந்தேதி காலை 8.30 மணிக்கு மண்டபார்ச்சனையும், 96வாசனை திரவியங்கள் கொண்டு சுவாமிக்கு அபிஷேகமும்நடைபெறஉள்ளது. மேலும் அன்று காலை கந்த சஷ்டி விழாவும், மாலையில் சூரசம்ஹார விழாவும் நடைபெற உள்ளது. தொடர்ந்து விழாவின் முக்கிய நிகழ்ச்சியான திருக்கல்யாணம் 19 ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 9. 45 மணி முதல் 10. 15 மணி வரை நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை விழா குழுவினர் செய்து வருகிறார்கள்.

# தீபாவளி ஜவுளிஇனிப்புகள் வாங்க திரண்ட மக்களால் திணறிய திருப்பூர்



திருப்பூர், நவ.11

தீபாவளி பண்டிகையை யொட்டிபனியன்தொழில் நகரானதிருப்பூரில்பெரும் பாலான நிறுவனங்களில் போனஸ் வழங்கப்பட்டு உள்ளது. போனஸ் வாங் கிய தொழிலாளர்கள் ஆடைஉள்ளிட்டபொருட் களை வாங்கிக்கொண்டு சொந்த ஊர்களுக்கு புறப் பட்டு சென்ற வண்ணம் உள்ளனர். இதற்காக நேற் றிரவு முதல் திருப்பூரில் இருந்து 450 சிறப்பு பஸ் கள் இயக்கப்பட்டு வருகி றது.

மேலும் சில தொழிலா ளர்கள் இன்று இரவு முதல் செல்கின்றனர். அவர்கள் தங்களுக்கு தேவையான பொருட்களை திருப்பூரில் உள்ள ஜவுளிக்கடைகள், ஸ்வீட் கடைகளில் வாங்கி வருகின்றனர். இதனால் திருப்பூர் கடை வீதிகளில் பொதுமக்கள், பனியன் தொழிலாளர்களின் கூட் டம் அலைமோதுகிறது. இதன் காரணமாக திருப் பூர் மாநகரின் முக்கிய சாலைகளில் போக்குவ ரத்து நெரிசல் ஏற்பட்டுள் ளது. குறிப்பாக குமரன் சாலையில் முக்கிய ஜவு ளிக்கடைகள், ஜூவல்லரி கள், அரசு அலுவலகங் கள், வங்கிகள் அதிகம் உள்ளன. இதன் காரண மாக குமரன் சாலை போக் குவரத்து நெரிசலால் சிக்கி திணறியது.

கடைகளுக்கு வந்த இரு சக்கர வாகன ஓட்டிகள் சாலையோரம் வாகனங் களை நிறுத்தியதால் போக் குவரத்து ஸ்தம்பித்தது. இதை தவிர்க்கும் வகை யில் பாதசாரிகள் நடந்து செல்வதற்காக சாலையோ ரம் தடுப்புகள் அமைக்கப் பட்டு நடந்து செல்ல வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் குமரன் சாலையில் வாகனங்கள் அணிவகுத்து ஊர்ந்து செல்கின்றன. போக்குவ ரத்து போலீசார்பாதுகாப்பு பணியை மேற்கொண்டுள் ளனர்.

தீபாவளி பண்டிகை யையொட்டி தென்மா வட்ட பஸ்கள் கோவில் வழி பஸ் நிலையத்தில் இருந்து இயக்கப்படு கிறது.

சிறப்பு பஸ்களில் பெரும்பாலானவை இங் கிருந்து இயக்கப்படுவ தால் அதற்கேற்ப பஸ் களை நிறுத்த இடவசதி செய்யப்பட்டுள்ளது. பஸ் நிலையத்தின் மேற்கு பகு தியில் மாநகராட்சியின் உரக்கிடங்கு இருந்த பகு தியை சுத்தம் செய்து அங்கு பஸ்களை நிறுத்தி எடுத் துச்செல்ல வசதி செய்யப் பட்டுள்ளது.

பஸ்நிலையம் முழுவ தும் மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. பயணிகள் பஸ்சில் முண் டியடித்து ஏறுவதை தடுக்க கட்டைகளால் தடுப்புகள் அமைக்கப்பட்டு வரிசை யில் ஏற வழிவகை செய் யப்பட்டுள்ளது.

பயணிகள் அதிக அள வில் வருவார்கள் என்ப தால் பஸ்நிலையத்துக்குள் காத்திருப்பதற்காக தற்கா லிக கூடாரங்கள் அமைக் கப்பட்டுள்ளது. இது போல் புதிய பஸ் நிலையம், மத்திய பஸ் நிலையத்திலும் பாது காப்பு ஏற்பாடுகள் பலப்ப டுத்தப்பட்டுள்ளன. இதேப்போல் திருப்பூர் ரெயில் நிலையத்தில் நேற் றிரவு மற்றும் இன்று காலை பயணிகள் கூட்டம் அலைமோதியது. முன்ப திவு செய்யாத பெட்டிக ளில் பயணிகள் போட்டி போட்டுக்கொண்டு ஏறி னர்.

கடைவீதிகளில் கூட்ட நெரிசலை பயன்படுத்தி ஜேப்படி ஆசாமிகள்கைவ ரிசை காட்டுவார்கள் என்ப தால் மப்டியில் குற்றப்பிரிவு போலீசார் பணியமர்த்தப்பட்டுள்ள னர். மாநகரில் 700 போலீ சார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதுதவிர உயர்கோபுரங் கள் அமைத்து போலீசார் கண்காணித்து வருகிறார் கள். இதுபோல் மாவட் டம் முழுவதும் ஆயிரத் திற்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட் டுள்ளனர். இதேபோல ரோந்துப்பணியும் பலப்ப டுத்தப்பட்டுள்ளது.

மாவட்டம் முழுவதும் 296 தற்காலிக பட்டாசு கடைகள் அமைக்கப்பட் டுள்ளன. பட்டாசு கடை கள் அமைந்துள்ள பகுதி யில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதா? என்பது குறித்தும் போலீ சார் கண்காணித்து வருகி றார்கள்.



அமைச்சர்கள் சாமிநாதன் மற்றும் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் நகராட்சி அலுவலகத்தில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் நடைபாதை வியாபாரிகளுக்கு தள்ளுவண்டிகளை வழங்கினார்.




தமிழக முதல்வர் சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட பயனாளிகளுக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கியதை தொடர்ந்து அமைச்சர்கள் சாமிநாதன், கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திருப்பூர் மாவட்டம் பல்லடம் நகராட்சி மணிவேல் மஹாலில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு முதல்வரின் வாழ்த்து மடல்களை வழங்கினார்.

# ஞாயிற்றுக்கிழமை தீபாவளி பண்டிகை வருவதால் வெள்ளகோவில் வாரச்சந்தை இன்று செயல்படும்



வெள்ளகோவில், நவ.11

வெள்ளகோவிலில் வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமை நகராட்சியின் வாரச்சந்தை செயல்பட்டு வருகிறது.

இந்த வார சந்தைக்கு வெள்ளகோவில் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து விவசாயிகள் தங்க ளது விளைநிலங்களில் பயிரிடப்பட்ட காய்கறி மற்றும் தானிய வகை களை விற்பனைக்கு கொண்டு வருவது வழக் கம்.

இதனை அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மற் றும் நூல் மில்களில் தங்கி வேலை செய்து வரும் வட மாநில தொழிலாளர்கள் தங்களுக்கு ஒரு வாரத் திற்கு தேவையான காய் கறி மற்றும் மளிகைப் பொருட்களை வாங்கி செல்வார்கள்.

இந்நிலையில் வருகிற 12ந்தேதி (ஞாயிற்றுக்கி ழமை) தீபாவளி பண் டிகை வருவதால், நாளை (சனிக்கிழமை) வார சந்தை செயல்படும்.

ஆகையால் பொதுமக் கள் மற்றும் வியாபாரிகள் இந்த வாய்ப்பை பயன்ப டுத்திக் கொள்ள வேண்டு மாய் வெள்ளகோவில் நக ராட்சி நிர்வாகத்தின் சார்பில் நகர மன்ற தலை வர் மு.கனியரசி, ஆணை யாளர் எஸ்.வெங்கடேஸ் வரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

# உடுமலை சுற்றுலா தலங்களுக்கு சிறப்பு பஸ்கள் இயக்க கோரிக்கை



உடுமலை, நவ.11

கோவையில் இருந்து தென் மாவட்டங்களுக் கும், பழநி, கொடைக்கா னல் உள்ளிட்ட இடங்க ளுக்கு செல்வதற்கும், உடுமலை பிரதான வழித் தடமாக உள்ளது. இத னால் விடுமுறை நாட்க ளில், கோவை, பொ ள்ளாச்சி, திருப்பூர், திண் டுக்கல் உள்பட வெளி மாவட்டங்களில் இருந் தும், பாலக்காடு போன்ற பிற மாநிலத்தை சேர்ந்த பகுதிகளில் இருந்தும், இங்குள்ள சுற்றுலா பகுதி களுக்குபயணிகள்அதிக அளவில் வருகை தரு வது வழக்கம். திருமூ ர்த்தி மலையில் மும் மூர்த்திகளின் தலமும் அமைந்துள்ளதால் பண் டிகை நாட்களில் இங்கு கூட்டம் அதிகரித்து காணப்படும். தற்போது வழக்கமாக ஒரு மணி நேரத்துக்கு ஒரு பஸ் என்ற விகிதத்தில், பஸ்கள் இயக்கப்படுகிறது. சிறப்பு நாட்களில் கூடுதல் பஸ் கள் இல்லாததால், வெளி யூரிலிருந்து வரும் பயணி கள் சரியான பஸ் நேரமும் தெரியாமல், நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலைமைக்கு ஆளாகின்ற னர். எனவே, தீபாவளி பண்டிகை விடுமுறையை யொட்டி உடுமலை சுற் றுப்புற பகுதிகளில் உள்ள சுற்றுலா இடங்களுக்கு, கூடுதல் சிறப்பு பஸ்கள் இயக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்து ள்ளனர்.

# தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பல்லடத்தில் போக்குவரத்து மாற்றம்

பல்லடம், நவ.11

திருப்பூர்மாவட்டம்பல் லடம்நகரமானதுகோவை திருச்சி தேசிய நெடுஞ்சா லையில் அமைந்துள்ளது. இந்தநிலையில் கோவை திருச்சி தேசிய நெடுஞ்சா லையுடன், திருப்பூர், பொள்ளாச்சி, உடுமலை, அவிநாசி, தாராபுரம் ஆகிய மாநில நெடுஞ்சா லைகள் இணைவதால், பல்லடத்தில் வாகன போக்குவரத்து பல மடங்கு அதிகரித்து வருகி றது.

கோவை திருச்சி தேசிய நெடுஞ்சாலை எண் 81 ல் தினமும் சுமார் 40 ஆயிரத் திற்கும் மேலான வாகனங் கள் செல்கின்றது. திரும ணம் போன்ற விஷேச நாட்களில் இந்த எண் ணிக்கை 60 ஆயிரத்தை தாண்டும். இந்த நிலை யில், நாளை மறுநாள் தீபா வளி பண்டிகை என்ப தால், மக்கள் சொந்த ஊருக்கு செல்வதற்காக பயணம் மேற்கொண்டு வருகிறார்கள். இதனால் கார், மோட்டார் சைக்கிள் களின் எண்ணிக்கை, வழக் கத்தை விட பல மடங்கு அதிகரித்து சென்ற வண் ணம் உள்ளது.

இதனால் கோவைதி ருச்சி மெயின் ரோட்டி லும், மங்கலம் ரோட்டி லும், கடும் போக்குவரத்து நெரிசல் நிலவி வருகிறது. போக்குவரத்து நெரிசலை முன்னிட்டு போக்குவ ரத்து போலீசார் காரணம் பேட்டை நால்ரோடு பகு தியில் இருந்து கனரக வாகனங்கள்மற்றும்சரக்கு வாகனங்களை, காமநாயக் கன்பாளையம் வழியாக வும், மங்கலம் வழியாக வும், செல்ல அறிவுறுத்தி வருகிறார்கள்.

போக்குவரத்து போலீ சார் நெரிசலை கட்டுப்ப டுத்த தடுப்புகள் வைத் தும், போக்குவரத்தை ஒழுங்குபடுத்தியும் ரோடு களில் கடுமையான போக் குவரத்து நெரிசலை சமா ளித்து வருகிறார்கள். மேலும் பல்லடம் நகரின் முக்கியமான பகுதிகளான பஸ் நிலையம், கடைவீதி போன்ற இடங்களில் கண் காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு போலீ சார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# பயிர்களின் மகசூல் அதிகரிக்க மானிய விலையில் நுண்ணூட்ட உரங்கள்: விவசாயிகள் வாங்கி பயன்பெற வேண்டுகோள்



திருப்பூர், நவ.11

திருப்பூர் மாவட்டத்தில் நெல் 10 ஆயிரத்து 557 ஹெக்டேர், தானியம் 56 ஆயிரத்து 932 ஹெக்டேர், பயிறு வகைகள் 18 ஆயி ரத்து 792 ஹெக்டேர், எண்ணை வித்துக்கள் 8 ஆயிரத்து 252 ஹெக்டேர், பருத்தி ஆயிரத்து 135 ஹெக்டேர், கரும்பு 2 ஆயி ரத்து 960 ஹெக்டேர் என சராசரியாக 98 ஆயிரத்து 628 ஹெக்டேர் பரப்பள வில் வேளாண் பயிர்கள் சாகுபடி மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

பயிர்கள் வளர்ச்சி மற் றும் மகசூல் அதிகரிக்கும் நுண்ணூட்டங்கள் மானிய விலையில் வழங்கப்படுகி றது. இதுகுறித்து, மாவட்ட தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து திட்ட ஆலோசகர் அரசப் பன் கூறியதாவது: திருப் பூர் மாவட்டத்தில் பெரு வாரியான பகுதிகள் கரிசல் மண்பூமியாகவும், ஓடைக் கல் பூமியாகவும் இருப்பத னால் சுண்ணாம்புச்சத்து மிகுந்து காணப்படுகிறது. இதனால் பயிர்களுக்கு அளிக்கப்படும் உரங்கள் முழுமையாக கிடைக்காமல் மஞ்சள் கலந்த பழுப்பு நிறத்துடனும், ஊதா நிற இலைகளுடனும், வளர்ச்சி குன்றி குறைபாட் டுடன் காணப்படுகின் றன. இச்சத்து குறைபாடு காரணமாக மகசூல் பல மடங்கு குறைவதுடன் விளைபொருட்களின் தர மும் குறைந்து காணப்ப டும்.

நுண்ணூட்டங்கள் பயி ருக்கு குறைந்தளவே தேவைப்பட்டாலும், பயி ரின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கிறது. நுண் ணூட்டக்கலவை என்பது கால்சியம், மாங்னீசியம், போரான், துத்தநாகம், இரும்பு, மாலிப்டீனியம் போன்ற நுண்ணூட்டங்களை உள் ளடக்கிய கலவை ஆகும். விதைப்பு செய்தவுடன் பயிறுக்கு தேவையான அளவு உரிய இக்கலவை யினை இடும் பொழுது, நுண்ணூட்ட சத்து குறை பாடுகள் நீங்கி பயிரின் மக சூல் பலமடங்கு அதிகரிப்பதுடன் விளைபொருட்களின் தர மும் அதிகரிக்கிறது.

இந்நுண்ணூட்டங்கள் பயிரின் வகைக்கு ஏற்ப பயிறு நுண்ணூட்ட கலவை, சிறுதானிய நுண் ணூட்டம் வகைப்படுத்தப் படுகின்றன. பயிறு வகை பயிர்களுக்கு ஹெக்டே ருக்கு 5 கிலோ வீதம் 20 கிலோ மணலுடன், நிலக் கடலை மற்றும் தானியப் பயிர்களுக்கு, அதற்குரிய நுண்ணூட்டச்சத்து ஹெக் டேருக்கு 12.5 கிலோ வீதம் 50 கிலோ மணலு டன் கலந்து, மேலாக தூவ வேண்டும்.

நுண்ணூட்ட கல வையை இடும்போது மணலுடனோ அல்லது குப்பையுடனோ கலந்து சீராக இடவேண்டும். இத் தகைய கூடுதல் மகசூல் தரும் நுண்ணூட்டங்கள், தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து திட் டங்கள், பயிறுவகை மற் றும் ஊட்டச்சத்து மிக்க தானியங்கள் திட்டத்தின் கீழ் 50 சதவீதம் அல்லது ஹெக்டேருக்கு, ரூ.500 மானியத்தில் மாவட்டத்தி லுள்ள அனைத்து வட்டா ரங்களிலும் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்கள் வாயிலாக வினியோகம் செய்யப்படு கிறது. மானிய விலையில் விவசாயிகள் இச்சத்து கல வையினை பயன்படுத்தி சாகுபடி தொழில்நுட்பங் களை கடைபிடித்து, கூடு தல் மகசூல் பெறலாம். மேலும் கூடுதல் விபரங்க ளுக்கு வட்டார வேளாண் உதவி இயக்குனர்கள், வேளாண் அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித் தார்.

# வெள்ளகோவில் தீயணைப்பு துறை சார்பில் பட்டாசு வெடிப்பது குறித்து விழிப்புணர்வு துண்டு பிரசுரம்



வெள்ளகோவில், நவ.11

வெள்ளகோவிலில் தீபா வளி பண்டிகையை முன் னிட்டு தீயணைப்பு துறை சார்பில் பட்டாசு வெடிப் பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரங்கள் வழங் கும் நிகழ்ச்சி நடந்தது. இதற்கு தீயணைப்பு நிலை அலுவலர் வேலுச்சாமி தலைமை தாங்கினார். இதில் பட்டாசுகளை வீட் டினுள் வெடிக்க கூடாது. குடிசை பகுதி மற்றும் தீ எளிதில் பற்றி கொள்ளும் அபாயம் உள்ள பகுதிக ளில் பட்டாசுகள் வெடிக் கக் கூடாது. சிறுவர்கள் பட்டாசு வெடிக்கும் போது பெரியவர்கள், அவ ர்களை பாதுகாப்பாக உட னிருந்து கவனித்துக் கொ ள்ள வேண்டும். மேலும் கண்டிப்பாக சப்பல் அணி த்து பட்டாசு வெடிக்கவே ண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்களை வெள்ளகோவில் நகர் பகு தியில் வழங்கி விழிப்பு ணர்வை ஏற்படுத்தினர்.

# பல்லடம் அருகே சாலையை அகலப்படுத்த பொதுமக்கள் கோரிக்கை



பல்லடம், நவ.11

திருப்பூர்மாவட்டம்பல் லடம் அருகே உள்ள ஆறு முத்தாம்பாளையம் ஊராட்சியில் சுமார் 8 ஆயி ரத்திற்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். இங்குள்ள ஆறுமுத்தாம் பாளையம் சேடபாளை யம் ரோடு சுமார் 16 அடி அகல ரோடாக உள்ளது. இந்த நிலையில், ஆறுமுத் தம்பாளையத்தில் இருந்து. தினமும் ஆயிரக் கணக்கான வாகனங்கள் அந்த ரோட்டில் சென்ற வண்ணம் உள்ளது.

குறுகலான ரோடாக உள் ளதால் ஒரு வாகனம் மட் டும் செல்ல முடிகிறது. எனவே எதிரே வரும் வாக னம் ஒதுங்கி நின்று வழி விட்ட பின்னர் தான் அடுத்த வாகனம் செல்ல முடிகிறது. இதனால் குறிப் பிட்ட நேரத்திற்கு பள்ளி மற்றும் வேலைக்குச் செல்ல முடியாமல் பொது மக்கள் திணறி வருகிறார் கள். எனவே குறுகலான அந்த ரோட்டை விரிவா க்கம் செய்து அகலப்ப டுத்தி 2 வாகனங்கள் செல் லும் வகையில் அமைக்க வேண்டும் என ஆறுமுத் தாம்பாளையம் ஊர்ப்பொ துமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# திருநின்றவூர் இருதயாலீஸ்வரர் கோவிலில் பூசலார் நாயன்மார் குருபூஜை விழா

சென்னை, நவ.11

திருநின்றவூரில் ஸ்ரீ மரகதாம்பிகை உடனாய ஸ்ரீ இருதயாலீஸ்வரர் கோவில் அமைந்துள்ளது. பழம்பெருமை வாய்ந்த இக்கோவிலில் பூசலார் நாயன்மார் குருபூஜை பெரு விழா வருகிற 14 ந்தேதி நடைபெறுகிறது.

விழாவை முன்னிட்டு 14ந்தேதிகாலை7மணிக்கு திருப்பள்ளி எழுச்சியும் 8 மணிக்கு தேவாரம் திருவாசகம் இன்னிசை பாராயணம் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. காலை 11 மணிக்கு பூசலார் நாயனாருக்கு சிறப்பு மகாஅபிஷேகம் மற்றும் மகா தீபாரதனை நடைபெறுகிறது.




மதியம் 1 மணிக்கு பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்படுகிறது. மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை அம்பத்தூர் இசக்கி நாட்டியாலயா மற்றும் ஆவடி தாண்டவா நாட்டியப் பள்ளி மாணவ மாணவிகளின் பரதநாட்டிய கலை நிகழ்ச்சி நடைபெறுகிறது. மாலை 5 மணிக்கு பூசலார் நாயனார் திருக்கோவிலில் வீதி உலா வரும் நிகழ்ச்சியும் இரவு 7 மணிக்கு பூசலார் நாயனார் சிவபெருமானோடு ஐக்கியமாகும் திருக்காட்சியும் நடக்கிறது. இரவு 9 மணிக்கு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. விழாவுக்கான ஏற்பாடுகளை கோவில் பரம்பரை தர்மகர்த்தா பி. எஸ்.எஸ்.எஸ். ஜெகன் சோமசுந்தரம் செட்டியார், பூசலார் குரு பூஜை பரம்பரை உபயதாரர்கள் ஆர். கிருஷ்ண மூர்த்தி, ஆர். ராமசுப்பிரமணியன், மற்றும் கோவில் சிவாச்சாரியார்கள், கோவில் மேலாளர் ஜி. தண்ணீர்மலை செட்டியார், சி. கோட்டீஸ்வரன் ஆகியோர் செய்து வருகிறார்கள்.

# தேசிய இளைஞர் திருவிழாவிற்கு மாணவர்கள் தேர்வு செய்யும் நிகழ்ச்சி

தஞ்சாவூர், நவ.11

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் தேசிய இளைஞர் திருவிழா டெல்லியில் நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் ஒவ்வொரு மாநிலங்களில் இருந்தும் ஒவ்வொரு மாணவர்கள் குழு கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்த உள்ளனர். அதன் முன்னேற்பாடாக திருச்சிராப்பள்ளி பாரதி தாசன் பல்கலைக்கழகம் சார்பில் தஞ்சாவூர் மாவட்ட அளவிலான மாணவர்கள் குழுவிவை தேர்வு செய்யும் நிகழ்ச்சி தஞ்சாவூர் மருதுபாண்டியர் கல்லூரியில் நடைபெற்றது.



நிகழ்ச்சிக்கு மருது பாண்டியர் கல்வி நிறுவனங்களின் தலைவர் மற்றும் நிர்வாக அறங்காவலர் மருது பாண்டியன் முன்னிலை வகித்தார். மருதுபாண்டியர் கல்லூரி முதல்வர் விஜயா, துணை முதல்வர் தங்கராஜ் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில நாட்டு நலப்பணி திட்ட குழும இயக்குநர் செந்தில்குமார், திருச்சிரா ப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழக நாட்டு நலப்பணி திட்ட ஒருங்கிணைப்பாளர் இலக்குமி பிரபா அம்மையார்ஆகியோர்மாணவர்களை தேர்வு செய்வதில் நெறியாளர்களாக செயல்பட்டனர்.

இதில் தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்த பல்வேறு கல்லூரிகளில் இருந்து மாணவர்கள் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

முன்னதாக தஞ்சாவூர் மருதுபாண்டியர்கல்லூரி நாட்டு நலப்பணி திட்ட அலுவலரும், தஞ்சாவூர் மாவட்ட தேசிய இளைஞர் திருவிழாவிற்கான சிறப்பு அலுவலருமான சந்தோஷ்குமார் அனைவரையும் வரவேற்றார்.

முடிவில் தமிழ்துறை தலைவர் வெற்றிவேல் நன்றி கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரி மேலாளர் கண்ணன் செய்திருந்தார்.

# உடுமலை அமராவதி அணை 70 அடியை எட்டியதால் விவசாயிகள் மகிழ்ச்சி

உடுமலை, நவ.11

திருப்பூர் மாவட்டம் உடுமலையை அடுத்துள்ள அமராவதி அணையின் மூலம் திருப்பூர் மற்றும்கரூர்மாவட்டங்களில் உள்ள சுமார் 55 ஆயிரம் ஏக்கர் பழைய, புதிய ஆயக்கட்டு பாசன நிலங்கள் பயன் பெற்று வருகின்றன. மேலும் நூற்றுக்கணக்கான கரையோர கிராமங்களுக்கு இந்த அணை குடிநீர் ஆதாரமாகவும் விளங்கி வருகிறது.

இந்நிலையில் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யாமல் குறைந்து போனது. இதனால் அணையில் உள்ள நீர் இருப்பை பொறுத்து கரூர் வரையில் நூற்றுக்கணக்கான கிராமங்களுக்கு குடிநீர்தேவைகளுக்காகவும், பழைய, புதிய ஆயக்கட்டுப் பகுதிகளில் உள்ள நிலைப் பயிர்களைக் காப்பாற்றவும் ஜூன் 29ந் தேதி அணையில் இருந்து உயிர் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.



இதையடுத்து திருப்பூர் மாவட்டத்தில் உள்ள புதிய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்கு நிலைப் பயிர்களைக் காப்பாற்றும் பொருட்டு சிறப்பு நனைப்பிற்கும், குடிநீர்த் தேவைகளுக்காகவும் மீண்டும் அணையை திறக்க தமிழக அரசு உத்தரவிட்டது. இதன்படி ஆகஸ்ட் 8ந்தேதி அமராவதி அணையில் இருந்து பிரதான கால்வாயில் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அப்போது அணையின் நீர்மட்டம் 65 அடியாக இருந்தது. இதைத்தொடர்ந்து அணையின் நீர்மட்டம் குறைந்து போனது.

இந்நிலையில் மேற்குத்தொடச்சி மலைப்பகுதியில் செப்டம்பரில் ஓரளவு மழைப்பொழிவு இருந்ததால் அணைக்கு 400 முதல் 500 கன அடி வரை நீர்வரத்து இருந்தது. இதனால் அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து 60 அடியை தாண்டியது.

இதைத்தொடர்ந்து பயிர்களை காப்பாற்றும் பொருட்டும், குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டும் அக்டோபர் 13ந்தேதி அமராவதி அணையில் இருந்து மீண்டும் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இதனால் அணையில் நீர் இருப்பு படிப்படியாக குறைந்தது.

தற்போது வடகிழக்குப் பருவமழை தொடங்கி கடந்த சில நாட்களாக மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்து வருகிறது. இதனால் 90 அடி உயரமுள்ள அணையின் நீர்மட்டம் இன்று காலை நிலவரப்படி 70 அடியை எட்டியது. பருவமழை தீவிரம் அடைந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மேற்குத்தொடர்ச்சி மலைப் பகுதியில் தொடர்ந்து கனமழை பெய்து வருவதால் திருப்பூர் மாவட்டம், உடுமலையை அடுத்துள்ள சுற்றுலாத்தலமான திருமூர்த்தி மலையில் உள்ள பஞ்சலிங்கம் அருவியில் குளிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# அவினாசி ஊராட்சி ஒன்றிய கூட்டம்: உறுப்பினர்களின் கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்படும்; ஒன்றிய தலைவர் உறுதி

அவினாசி, நவ.11

திருப்பூர் மாவட்டம் அவிநாசி ஊராட்சி ஒன்றிய குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றிய குழு தலைவர் ஜெகதீசன் தலைமை தாங்கினார். ஒன்றிய ஆணையர் ரமேஷ், வட்டார வளர்ச்சி அலுவலர் விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் விவாதம் வருமாறு:

முத்துசாமி (சிபிஎம்): சிஐடியூ., தொழிற்சங்க முறையீட்டால்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள சம்பளத்தை உள்ளாட்சியில் பணிபுரியும் டேங்க் ஆபரேட்டர்கள், தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்க தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.




சேதுமாதவன் (திமுக): தேவம்பாளையம் மயானத்துக்கு சுற்றுச்சுவர் அமைக்க வேண்டும். குளத்துப்பாளையம் டீச்சர்ஸ் காலனி பகுதியில் கான்கிரீட்சாலைஅமைக்க வேண்டும்.

கார்த்திகேயன்(திமுக): பழங்கரை ஊராட்சி ராஜா நகரில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் குடிநீர் பற்றாக்குறையை தீர்க்க மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்க வேண்டும். நியாயவிலை கடைகளில் பார பட்சமின்றி அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொருள்கள் வழங்க வேண்டும். அய்யாவு (அதிமுக): குப்பாண்ட ம்பாளையத்தில் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி அமைக்க வேண்டும். அய்யம்பாளையம் மயானத்துக்கு சாலை அமைக்க வேண்டும். வடுகபாளையம், குப்பாண்டம்பாளையம், அய்யம்பாளையம், துலுக்கமுத்தூர் ஆகிய ஊராட்சிகளில் பழுதடைந்துள்ள தார்சாலைகளைசீரமைக்க வேண்டும். இவ்வாறு உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தனர். பின்னர் ஒன்றிய குழு தலைவர் ஜெகதீசன் கூறும்போது, உறுப்பினர்களின் கோரிக்கைகள் அனைத்தும் பரிசீலனை செய்து விரைவில் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்தார்.

# தீபாவளி பண்டிகை வனப்பகுதியில் விதிகளை மீறினால் கடும் நடவடிக்கை: ஆனைமலை புலிகள் காப்பக கள இயக்குனர் எச்சரிக்கை

உடுமலை, நவ.11

நாடு முழுவதும் வருகிற 12ந்தேதி தீபாவளி பண்டிகை கொண்டாடப்படவுள்ளது. இதற்காக, மக்கள் பலரும், புத்தாடை, பட்டாசு மற்றும் இனிப்புகள் வாங்க ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்நிலையில் ஆனைமலை புலிகள் காப்பகத்தை ஒட்டிய கிராமங்கள், செட்டில்மெண்ட் பகுதிகளில் பட்டாசுகள் வெடிப்பதை தவிர்க்கவும், பல்வேறு விதிமுறை வகுத்து பசுமை தீபாவளி கொண்டாடவும் அறிவுறுத்தப்பட்டு வருகின்றனர். இதுகுறித்து ஆனைமலை புலிகள் காப்பக கள இயக்குனர் ராமசுப்பிரமணியம் கூறியதாவது:

வனப்பகுதி அருகே அதிக ஒலி எழுப்பும் பட்டாசுகள் வெடிப்பதால், பறவைகள், வனவிலங்குகள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றன. குறிப்பாக அரியவகை பறவைகள், தனது வாழ்விடங்களை விட்டு மனித நடமாட்டம் இல்லாத பகுதிகளைதேடி சென்று விடும் அபாயம் உள்ளது. எனவே, வனம் ஒட்டிய கிராமங்களில் வசிக்கும் மக்கள், அதிக ஒலி எழுப்பும் பட்டாசுகளை வெடிக்கக் கூடாது. முடிந்த வரை பட்டாசு இன்றி பசுமை தீபாவளியை கொண்டாட கிராம மக்கள் முன்வர வேண்டும். வனப்பகுதியில் வசிக்கும் மலைவாழ் மக்கள், பட்டாசு வெடிப்பதில்லை. இருப்பினும், அந்தந்த செட்டில்மெண்ட் பகுதிகளிலும், விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. இதேபோல வன எல்லையை ஒட்டியுள்ள கிராம பகுதிகள், தனியார் விடுதிகளுக்கும் துண்டு பிரசுரம் வினியோகித்து அறிவுறுத்தப்பட்டு வருகிறது. தீபாவளி கொண்டாட்டத்துக்கு வருவோரை வனத்துக்குள் அத்துமீறி அழைத்து செல்வதையும், தடை செய்யப்பட்ட பகுதிகளில் பட்டாசு வெடிப்பதையும் தவிர்க்க வேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. தீபாவளியை முன்னிட்டு, வனக்குழுவினர் ரோந்து பணியில் ஈடுபடுவர். விதிமுறைகளை மீறுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# வெள்ளகோவிலில் அ.தி.மு.க. பூத் கமிட்டி ஆலோசனை கூட்டம்

வெள்ளகோவில், நவ.11

வெள்ளகோவில் ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சிகளின் பூத் கமிட்டி இளைஞர், இளம் பெண்கள் பாசறை மகளிர் குழு அமைப்பு உள்ளிட்ட பணிகள் குறித்து ஆலோசனை கூட்டம் வேலம்பாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட முத்தூரிலும், மேட்டுப்பாளையம், வள்ளியரச்சல் ஊராட்சிகளுக்கான கூட்டம் புஷ்பகிரியிலும், வேலப்பநாயக்கன்வலசு ஊராட்சிக்கான கூட்டம் வெள்ளகோவிலிலும் நடந்தது. இதற்கு திருப்பூர் மாநகர், மாவட்ட அ.தி. மு.க. செயலாளர்வி.ஜெயராமன் தலைமை தாங்கினார்.

வெள்ளகோவில் அ.தி. மு.க. ஒன்றிய செயலாளர் எஸ்.என்.முத்துக்குமார் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் திருப்பூர் மாநகர் மாவட்ட கழக செயலாளர் வி.ஜெயராமன் பேசியதாவது:



காங்கயம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற இருக்கும் 2024 நாடாளுமன்ற தேர்தலில் 50 ஆயிரம் வாக்குகள் கூடுதலாக பெறுவதற்கு பணிகள் மேற்கொள்ள வேண்டும். அனைத்தும் மதத்தினருக்கும் பதவிகள் கொடுத்து அவர்களை முன்னிலைப்படுத்தி தொகுதிகளை பலப்படுத்த வேண்டும்.

உங்களால் தான் கழகம் வெற்றி பெற வேண்டும்.

ஆகையால் வருகின்ற நாடாளுமன்ற தேர்தலுக்காக சிறப்பான முறையில் பணியாற்றி வெற்றியை தேடி தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் மேலிடப் பார்வையாளரும், கழக அமைப்பு செயலாளருமான எஸ். தாமோதரன் கலந்து கொண்டு ஆய்வு பணிகள் மேற்கொண்டார்.

இதில் மாவட்ட கழக பொருளாளர் கே.ஜி. கிஷோர்குமார், மாவட்ட அம்மா பேரவை இணை செயலாளர்கள் ஏ.எஸ். முருகவேல், கே.ராஜலிங்கம், காங்கயம் ஒன்றிய செயலாளர்என்.எஸ்.என். நடராஜ், வெள்ளகோவில் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் ஆர்.வெங்கடேச சுதர்சன், ஒன்றிய கழக பொருளாளர் வி.பி. சந்திரமோகன், நகர செயலாளர்கள் காங்கயம். வெங்கு என்கின்றஜீ.மணி மாறன், முத்தூர். ஜி.முத்துக்குமார், வெள்ளகோவில் டீலக்ஸ் ஆர். மணி, முன்னாள் நகர் மன்ற தலைவர் வி.கந்தசாமி, ஒன்றிய இளைஞரணி தலைவர் கே.கண்ணுசாமி, இளைஞரணி செயலாளர் சி.கண்ணுசாமி, உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் மழை பசுமையாக மாறிய ஆனைமலை வனப்பகுதி

உடுமலை, நவ.11

திருப்பூர் மாவட்டம் உடுமலை அடுத்த ஆனைமலை புலிகள் காப்பக பகுதியில் உடுமலை மற்றும் அமராவதி வனச்சரகங்கள் உள்ளன. இங்கு ஈட்டி, சந்தனம், வெள்வெல், வாகை உள்ளிட்ட பல்வேறு வகையான மரங்கள் வளர்ந்துள்ளன. அது தவிர வனச்சரகங்களை வாழ்விடமாக கொண்டு யானை, புலி, சிறுத்தை, காட்டெருமை, கடமான் உள்ளிட்ட ஏராளமான வனவிலங்குகள் வசித்து வருகின்றன. அவற்றுக்குக்கான உணவு மற்றும் தண்ணீர் தேவையை மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் பூர்த்தி செய்து தருகின்றன. ஆனால் கோடை காலத்தில்வனப்பகுதியில்



உற்பத்தியாகின்ற ஆறுகளில் நீர்வரத்து குறைந்து விடுவதுடன் அங்கு வளர்ந்துள்ள மரங்கள் புற்கள் செடிகள் உள்ளிட்டவை காய்ந்து விடு கின்றன. இதனால் வன விலங்குகளுக்கு உணவு மற்றும்தண்ணீர்பற்றாக்குறை ஏற்பட்டு விடுகிறது. அதைத்தொடர்ந்து வனவிலங்குகள் வனப்பகுதியை விட்டு வெளியேறி அடிவாரப்பகுதிக்கு வந்து விடுகின்றன. அந்த வகையில் இந்த ஆண்டு கோடை காலத்தின் போது வனப்பகுதியில் கடுமையான வறட்சி ஏற்பட்டது. வழக்கமாக பெய்யும் தென் மேற்கு பருவமழையும் கைவிட்டுவிட்டது. இதையடுத்து வனவிலங்குகள் உணவு மற்றும் தண்ணீருக்காக அமராவதி அணைக்கு வந்த வண்ணம் இருந்தன. இந்தநிலையில் கடந்த 10 நாட்களாக மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் சாரல் மலையும், அவ்வப்போது பலத்த மழையும் பெய்து வருகிறது. இதன் காரணமாக வனப்பகுதியில் உற்பத்தியாகின்ற ஆறுகள் ஓடைகளில் நீர்வரத்து ஏற்பட்டுள்ளது. அத்துடன் வெப்பத்தின் தாக்கம் குறைந்து உள்ளதுடன் இதமான சீதோஷ்ண நிலை நிலவி வருகிறது. மேலும் வனப்பகுதியும் பசுமைக்கு மாறி வருகிறது. இதனால் வன விலங்குகளுக்கான உணவு மற்றும் தண்ணீர் தேவை பூர்த்தி அடைந்துள்ளது.

# இடுவாய் ஊராட்சியில் புதிய கால்நடை மருந்தக கட்டிடம்: அமைச்சர் திறந்து வைத்தார்

திருப்பூர், நவ.11

திருப்பூர் மாநகரில் உள்ள கலைஞர் கருணாநிதி பஸ் நிலையத்தில் இருந்து தமிழக போக்குவரத்து கழகம் சார்பில் கூடுதல் பஸ் வசதி சேவை தொடக்க விழா நடந்தது. விழாவுக்கு மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் தலைமை தாங்கினார். மாநகராட்சி மேயர் தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு புதிய வழித்தட பஸ் நீடிப்பு சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்தும், கால்நடை மருந்தகக் கட்டடத்தை திறந்து வைத்தும் பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது: திருப்பூர் மாநகராட்சி, கலைஞர் மு.கருணாநிதி பேருந்து நிலையத்திலிருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் சார்பில் கழுவேரிபாளையம் ஆதிதிராவிடர்குடியிருப்பு வரை நீடிக்கப்பட்ட காலை 2 நடைகள் மற்றும் மாலை 2 நடைகள் செல்லும் பேருந்து எண் 22/1, ஊத்துக்குளி ஆர்.எஸ், என்.பி.எஸ் நெருப்பெரிச்சல், வாவிபாளையம் திருக்குமரன் நகர், கணக்கம்பாளையம் வழியாக பெருமாநல்லூர் வரை காலை 1 நடை மற்றும் மாலை 1 நடை செல்லும் பேருந்து எண் 10, திருக்குமரன் நகர் நீடிப்பு வாவிபாளையம் வரை செல்லும் காலை 2 நடைகள் மற்றும் மாலை 2 நடைகள் செல்லும் பேருந்து எண் 43, கூலிபாளையம் நால் ரோடு, வாவிபாளையம், நெருப்பெரிச்சல் மற்றும் என்பிஎஸ் வழியாக சென்று மீண்டும் கலைஞர் மு.கருணாநிதி பேருந்து நிலையம் வந்தடையும் காலை 3 நடைகள் மற்றும் மாலை 3 நடைகள் செல்லும் பேருந்து எண் 102/103 ஆகிய எண்கள் கொண்ட பேருந்து வழித்தட நீடிப்பு சேவை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது என்றார். தொடர்ந்து திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், இடுவாய் ஊராட்சியில் பொதுப்பணித்துறையின் சார்பில் நபார்டு திட்ட நிதியின் கீழ் ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் கால்நடை மருந்தக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இதனை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார். இடுவாய் கால்நடை மருந்தக கட்டிடம் தரைத்தளமானது 155.71 சதுர மீட்டர் பரப்பளவு ஆகும். கால்நடை மருந்தக கட்டிடத்தில் பணியாளர் அறை, மருந்தக இருப்பு அறை, கழிப்பறை, பதிவறை, மருத்துவர் அறை போன்ற வசதிகளை கொண்டுள்ளது. இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் லட்சுமணன், துணை மேயர் பாலசுப்பிரமணியன், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்பட பலர் திரளாக கலந்து கொண்டனர்.






## இப்ப ரிலீஸ் ஆகுறதே 2ம் பாகம்தான்: ரசிகர்களை குழப்பிய கேப்டன் மில்லர் இயக்குனர்

இயக்குனர் ராஜு முருகன் இயக்கத்தில் நடிகர் கார்த்தி கதாநாயகனாக நடித்துள்ள திரைப்படம் 'ஜப்பான்'. இதில் கதாநாயகியாக 'துப்பறிவாளன்', 'நம்மவீட்டு பிள்ளை' போன்ற படங்களில் நடித்த அனு இமானுவேல் நடித்துள்ளார். இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைக்க ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் தயாரித்துள்ளது.

'ஜப்பான்' திரைப்படம் இன்று ரசிகர்களின் கொண்டாட்டத்துடன் திரையரங்குகளில் வெளியானது. இதையடுத்து நடிகர்கார்த்தி இப்படத்தின்முதல்காட்சியை காசி திரையரங்கில் ரசிகர்களுடன் பார்த்தார். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது.

## ஆர்யா நடிக்கும் தி வில்லேஜ் வெப் தொடரின் டீசர் வெளியீடு..!



நயன்தாரா நடித்த 'நெற்றிக்கண்' படத்தின் இயக்குனர் மிலிந்த் ராவ் இயக்கத்தில் ஆர்யா நடித்துள்ள வெப் தொடர் 'தி வில்லேஜ்'. இந்த வெப் தொடரில் திவ்யா பிள்ளை, ஆடுகளம் நரேன், தலைவாசல் விஜய், முத்துகுமார், ஜான் கொக்கேன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

'தி வில்லேஜ்' வெப் தொடர் வருகிற 24ம் தேதி அமேசான் பிரைம் ஓடிடி தளத்தில் வெளியாக உள்ளது. இந்த நிலையில் இந்த வெப் தொடரின் டீசரை படக்குழு வெளியிட்டுள்ளது. டீசரில் இடம்பெற்றுள்ள ஜாம்பி வகை திரைப்படம் போன்ற ஹாரர் காட்சிகள் தொடரின் மீதான எதிர்பார்ப்பை அதிகரிக்கும் வகையில் அமைந்துள்ளது. இந்த டீசர் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

## சூர்யாவும் நானும் சேர்ந்து நடிப்போம் கார்த்தி உறுதி



கடந்த 2007ஆம் ஆண்டு இயக்குனர்அமீர்இயக்கத்தில் வெளியான 'பருத்தி வீரன்' திரைப்படத்தின் மூலம கதாநாயகனாக தமிழ் தி ரை யு ல கி ல் அறிமுகமானவர் கார்த்தி. இப்படம் மிகப்பெரிய வரவேற்பை பெற்றது மட்டுமல்லாமல் கார்த்திக்கு பாராட்டையும் பெற்று தந்தது. இதைத்தொடர்ந்து ஆயிரத்தில் ஒருவன், பையா, நான் மகான் அல்ல, சிறுத்தை, கைதி என படங்களில் நடித்துள்ளார்.

கடந்த ஆண்டு இவர் நடிப்பில் வெளியான 'சர்தார்' திரைப்படம் மிகப்பெரிய வெற்றி பெற்று ரூ.100 கோடிக்கு மேல் வசூலை குவித்தது. மேலும், இப்படத்தின் இரண்டாம் பாகம்விரைவில்வெளியாகவுள்ளது.கார்த்தியின்25வதுபடமான'ஜப்பான்'திரைப்படத்தை இயக்குனர்ராஜுமுருகன்இயக்கியுள்ளார்.இப்படம்இன்றுதிரையரங்குகளில்வெளியானது.

இந்நிலையில், கார்த்தியின் 16 வருட சினிமா பயணத்தை விவரிக்கும் விதமாக வீடியோ ஒன்று வெளியாகியுள்ளது. இதில், சூர்யாவுடன் சேர்ந்து நடிக்கக் கூடாது என நினைக்கிறீர்களா? என்று கவுதம் மேனன் கார்த்தியிடம் கேள்வி எழுப்புகிறார். அதற்கு கார்த்தி, "சூர்யாவுடன் நடிக்க எனக்கு பயமாக இருக்கு. ஆனால், சில நேரங்களில் ஏன் ஒன்றாக ஒரு படத்தில் நடிக்கக் கூடாது என யோசிப்போம். சில வருடங்களுக்கு முன்பு ராஜமவுலி இருவரும் சேர்ந்து நடிக்குமாறு கூறினார். நல்ல கதை அமைந்தால் நடிப்போம்" என்று பேசினார்.

## விநியோக பிக்பாஸுடன் இணைந்த பிரபாஸ்.. எப்படி தெரியுமா?



இயக்குனர் பிரசாந்த் நீல் இயக்கத்தில்உருவாகியுள்ள திரைப்படம் 'சலார்'. இந்த படத்தில் 'பாகுபலி' தி ரை ப் ப ட த் தி ல் நடித்திருந்த பிரபாஸ் க தா நா ய க னா க நடித்துள்ளார். கே.ஜி.எப். திரைப்படத்தை தயாரித்த ஹோம்பாலே பிலிம்ஸ் 'சலார்' படத்தையும் தயாரிக்கிறது.

இந்த படத்தில் வரதராஜ மன்னார் என்ற கதாபாத்திரத்தில் நடிகர் பிரித்விராஜ் நடித்துள்ளார். இப்படத்தின் டீசர் சமீபத்தில் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை பெருமளவில் ஈர்த்தது. 'சலார்' திரைப்படம் டிசம்பர் 22ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

இந்நிலையில், இப்படத்தின் தமிழ்நாடு வெளியீட்டு உரிமையை ரெட் ஜெயன்ட் மூவிஸ் நிறுவனம் கைப்பற்றியுள்ளது. இதனை படக்குழு போஸ்டரை பகிர்ந்து அறிவித்துள்ளது. இந்த போஸ்டர் சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது.



## ரசிகர்களுடன் முதல் காட்சியை பார்த்த ஜிகர்தண்டா 2 படக்குழு



'ஜிகர்தண்டா' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து 8 வருடங்களுக்கு பிறகு இப்படத்தின் இரண்டாம் பாகம் உருவாகியுள்ளது. கார்த்திக் சுப்பராஜ் இயக்கியுள்ள இந்த படத்தில் எஸ்.ஜே.சூர்யா மற்றும் ராகவா லாரன்ஸ் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இந்த படம் ரசிகர்களின் கொண்டாட்டத்துடன் திரையரங்குகளில் வெளியானது. இப்படத்தின் முதல் காட்சியை எஸ்.ஜே.சூர்யா, ராகவா லாரன்ஸ், இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் ஆகியோர் வெற்றி திரையரங்கில் ரசிகர்களுடன் பார்த்தனர். மேலும், திரைப்பிரபலங்கள் பலர் இப்படத்திற்கு வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், இயக்குனர் கார்த்திக் சுப்பராஜ் சமூக வலைதளத்தில் பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில், "யானையும் சினிமாவும் கடவுள் நமக்கு கொடுத்த சிறந்த பரிசு. சினிமாவின் சக்தியையும் அதன் பார்வையாளர்கள் குறித்த எங்களின் மனப்பூர்வமான வெளிப்பாடு இது. இந்த படத்தை நாங்கள் உருவாக்கும் போது கொடுத்த அன்பை நீங்களும் கொடுப்பீர்கள் என்று நம்புகிறேன். 4.5 வருடங்களுக்கு பிறகு மீண்டும் திரையரங்கில் வருவதை நினைத்து மகிழ்ச்சியடைகிறேன். படத்தில் இருக்கும் சர்ப்ரைஸை தயவு செய்து உடைத்து விடாதீர்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

## 10 கோடி பார்வையாளர்களை கடந்துள்ள ஹூக்கும் பாடல்



இயக்குனர் நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் ரஜினி நடிப்பில் ஆகஸ்ட் 10ஆம் தேதி வெளியான திரைப்படம் 'ஜெயிலர்'. இந்த படத்தில் மலையாள நடிகர் மோகன்லால், கன்னட நடிகர் சிவராஜ்குமார், ரம்யா கிருஷ்ணன், யோகிபாபு, வசந்த் ரவி, விநாயகன் உள்ளிட்ட திரைப்பிரபலங்கள் பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

'ஜெயிலர்'திரைப்படத்திற்கு முதலமைச்சர் மு.கஸ்டாலின், கமல்ஹாசன், விஜய் என பிரபலங்கள் பலர் தங்களது வாழ்த்துகளை தெரிவித்தனர். அதுமட்டுமல்லாமல் இப்படம் ரசிகர்களின் வரவேற்பை பெற்று ரூ.525 கோடிக்கு மேல் வசூலை குவித்தது. அனிருத் இசையமைத்திருந்த இப்படத்தின் பாடல்கள் அனைத்தும் சூப்பர் ஹிட்டடித்தது.

இந்நிலையில், இப்படத்தின் புதிய அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி, 'ஜெயிலர்' படத்தில் இடம்பெற்றுள்ள 'ஹூக்கும்' பாடல் 10 கோடி பார்வையாளர்களை கடந்துள்ளது. இதனை படக்குழு வீடியோவை பகிர்ந்து அறிவித்துள்ளது.

## சிக்ஸ் பேக்ஸ் முயற்சியில் ரித்திகா..

கடந்த 2016ஆம் ஆண்டு சுதா கொங்கரா இயக்கத்தில் மாதவன் நடித்த 'இறுதிச்சுற்று' படத்தின் மூலம் தமிழ் திரையுலகில் அறிமுகமானவர் ரித்திகா சிங். இயல்பிலேயே கிக் பாக்சிங் விளையாட்டு வீராங்கனையான ரித்திகா, அந்த படத்தில் அதே வேடம் என்பதால் கனகச்சிதமாக பொருந்தினார். இறுதிச்சுற்று படத்தில் நடித்ததற்காக அவருக்கு தேசிய விருதும் வழங்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து அசோக் செல்வன் ரித்திகா நடிப்பில் வெளியான 'ஓ மை கடவுளே' திரைப்படம் நல்ல வரவேற்பை பெற்றது. இதில் இவரது கதாபாத்திரம் பலரால் பாராட்டப்பட்டது. மேலும், இவர் 'ஷிவலிங்கா', 'குரு', 'கொலை' போன்ற படங்களில் நடித்துள்ளார்.பலபடங்களில்பிசியாகநடித்துவரும்ரித்திகாசிங்சமூகவலைதளத்திலும் ஆக்டிவாக உள்ளார். இவர் அடிக்கடி தனது கவர்ச்சி புகைப்படங்கள் மற்றும் உடற்பயிற்சி செய்யும் புகைப்படங்களை பகிர்ந்து ரசிகர்களை கவர்ந்து வருகிறார்.

இந்நிலையில், ரித்திகா சிங் தனது சிக்ஸ் பேக்ஸ் புகைப்படத்தை தற்போது பகிர்ந்துள்ளார். இதற்கு ரசிகர்கள் லைக்குகளை குவித்து கமெண்ட் செய்து வருகின்றனர்.




## உலகக்கோப்பை கிரிக்கெட்; இங்கிலாந்து பாகிஸ்தான் அணிகள் இன்று மோதல்

இந்தியாவில் நடைபெற்று வரும் 50 ஓவர் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. இதுவரை நடந்து முடிந்த லீக் ஆட்டங்களின் முடிவில் இந்தியா, தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா அணிகள் அரையிறுதிக்கு முன்னேறி உள்ளன.

மீதமுள்ள ஒரு அரையிறுதி இடத்திற்கு முன்னேற நியூசிலாந்து, பாகிஸ்தான் , ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையே போட்டி நிலவுகிறது. இதில் நியூசிலாந்து அணிக்கு அதிக வாய்ப்பு உள்ளது. ஏனெனில் 9 ஆட்டங்களில் ஆடி 10 புள்ளிகளுடன் புள்ளிப்பட்டியலில் நியூசிலாந்து 4வது இடத்தில் உள்ளது. அந்த அணியின் நெட் ரன் ரேட்டும் (+0.743) நல்ல நிலையில் உள்ளது.

இந்நிலையில் நாளை உலகக்கோப்பை தொடரில் 2 லீக் ஆட்டங்கள் நடைபெற உள்ளன. இதில் காலை 10.30 மணிக்கு நடைபெறும் முதலாவது லீக் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி வங்காளதேசத்தை எதிர்கொள்கிறது. அதன்பின் மதியம் 2.30 மணிக்கு நடைபெறும் மிக முக்கியமான ஆட்டத்தில் இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகள் கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் மைதானத்தில் மோத உள்ளன.

இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி மிகப்பெரிய வெற்றி பெற்றால் மட்டுமே அரையிறுதிக்கு செல்ல முடியும் என்ற இக்கட்டான சூழலில் விளையாட உள்ளது. அதேவேளையில் இதில் வெற்றி பெற்றால் எந்தவித சிக்கலின்றி 2025ஆம் ஆண்டு நடைபெற உள்ள சாம்பியன்ஸ் டிராபிக்கு தகுதிபெற முடியும் என்பதால் இங்கிலாந்து அணியும் மல்லுக்கட்டும். இதனால் இந்த ஆட்டத்தில் விறுவிறுப்புக்கு பஞ்சம் இருக்காது. மேலும் இந்த ஆட்டம் முடிந்தவுடன் இந்திய அணியுடன் அரையிறுதியில் மோதப்போகும் அணி எதுவென்று தெரியவரும் என்பதால் இது கூடுதல் எதிர்பார்ப்பை உண்டாக்கியுள்ளது.




## தேசிய விளையாட்டு போட்டி; ராஜா பாலிந்திரா கோப்பையை வென்ற மராட்டியம்! தமிழகத்திற்கு 10வது இடம்.!

கோவாவில் நடைபெற்று வந்த 37வது தேசிய விளையாட்டு போட்டி நேற்றுடன் நிறைவடைந்தது. இதில் கடைசி நாளான நேற்று நடைபெற்ற போட்டிகளில் துப்பாக்கி சுடுதலில் ஆண்களுக்கான 10 மீட்டர் ஏர்ரைபிள் போட்டியில் மத்தியபிரதேச வீரர் ஐஸ்வரி பிரதாப் சிங் (250.7 புள்ளி) தங்கப்பதக்கம் வென்றார்.

இதில் நடந்த டிராப் பிரிவில் அரியானா வீரர் லக்ஷய் ஷிரான் (47 புள்ளி) தங்கப்பதக்கமும், தமிழக வீரர் பிரிதிவிராஜ் தொண்டைமான் (45 புள்ளி) வெள்ளிப்பதக்கமும் கைப்பற்றினர். சைக்கிளிங் 120 கிலோ மீட்டர் தூர ரேசில் பஞ்சாப் வீரர் ஹர்வீர் சிங் தங்கப்பதக்கத்தையும், தமிழக வீரர் ஸ்ரீநாத் லட்சுமிகாந்த் வெள்ளிப்பதக்கத்தையும் வசப்படுத்தினர்.

இரண்டு வாரங்கள் நடைபெற்ற இந்த போட்டியின் முடிவில் மராட்டியம் 80 தங்கம், 69 வெள்ளி, 79 வெண்கலம் என மொத்தம் 228 பதக்கங்களுடன் முதலிடம் பிடித்து அசத்தியது. 1994ம் ஆண்டுக்கு பிறகு மராட்டியம் ஒட்டுமொத்த சாம்பியன் அணிக்கு வழங்கப்படும் ராஜா பாலிந்திரா கோப்பையை வெல்வது இதுவே முதல்முறையாகும். 2007ம் ஆண்டு முதல் முதலிடத்தை பெற்று வந்த சர்வீசஸ் 66 தங்கம், 27 வெள்ளி, 33 வெண்கலம் என்று 126 பதக்கங்களுடன் 2வது இடத்துக்கு தள்ளப்பட்டது. அரியானா 62 தங்கம், 55 வெள்ளி, 75 வெண்கலத்துடன் மொத்தம் 192 பதக்கங்கள் வென்று 3வது இடத்தை பிடித்தது. மத்திய பிரதேசம் மற்றும் கேரளா அணிகள் முறையே 4வது மற்றும் 5வது இடங்களையும், போட்டியை நடத்திய கோவா அணி தனது சிறந்த தரநிலையாக 9வது இடத்தையும் பிடித்துள்ளன.

தமிழகம் 19 தங்கம், 26 வெள்ளி, 32 வெண்கலம் என 77 பதக்கங்களுடன் 10வது இடத்தை பிடித்துள்ளது. கர்நாடக நீச்சல் வீரர் ஸ்ரீஹரி நடராஜ்க்கு (8 தங்கம் உள்பட 10 பதக்கம்) சிறந்த வீரர் விருதை பி.டி.உஷா வழங்கினார். தலா 4 தங்கம், ஒரு வெள்ளி வென்ற ஜிம்னாஸ்டிக்ஸ் வீராங்கனைகள் சன்யுக்தா பிராசென் (மராட்டியம்), பிரனதி நாயக் (ஒடிசா) சிறந்த வீராங்கனை விருதை தட்டிச் சென்றனர்.

இந்த போட்டியின் நிறைவு விழாவில் துணை ஜனாதிபதி ஜக்தீப் தன்கர் மற்றும் இந்திய ஒலிம்பிக் சங்க தலைவர் பி.டி.உஷா உள்பட பலர் கலந்து கொண்டனர்



## மீண்டும் டென்னிஸ் களத்திற்கு திரும்பும் நவோமி ஒசாகா

'கிராண்ட்ஸ்லாம்'அந்தஸ்து பெற்ற ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரானது அடுத்தாண்டு ஜனவரி மாதம் 14ஆம் தேதி தொடங்கி 28ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் 2 முறை சாம்பியனான ஜப்பான் வீராங்கனை நவோமி ஒசாகா பங்கேற்க உள்ளார்.

குழந்தை பிறப்பை முன்னிட்டு இந்த ஆண்டில் டென்னிஸ் விளையாட்டில் இருந்து ஒதுங்கி இருந்த ஒசாகா ஆஸ்திரேலிய ஓபனில் பங்கேற்க திட்டமிட்டுள்ளார். அதற்கு பயிற்சி மேற்கொள்ளும் விதமாக டிசம்பர் 31 முதல் ஜனவரி 7ஆம் தேதி வரை நடைபெற உள்ள பிரிஸ்பேன் இண்டர்நேஷனல் டென்னிஸ் தொடரில் விளையாட உள்ளார்.

இது குறித்து ஒசாகா கூறுகையில், "நான் மீண்டும் போட்டியிடுவதில் மிகவும் உற்சாகமாக இருக்கிறேன். எனது சீசனை பிரிஸ்பேனில் தொடங்குவதை நான் எப்போதும் விரும்புகிறேன். மீண்டும் களத்திற்கு திரும்பி வர காத்திருக்க முடியவில்லை "என்று தெரிவித்துள்ளார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.